அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய சுமார் 5,800 மாடுகளும், சுமார் 6,000 ஆடுகளும் பயன்பெறும். எனவே, அந்தக் கால்நடை மருந்தகம் அவசியம் தேவை என்ற அடிப்படையிலே, கீழ்நகரிலே இருக்கக்கூடிய கால்நடை மருத்துவர் அவர்கள், கடந்த 5–3–2012 ஆம் தேதியன்று, 9/2012 என்ற எண்ணிட்ட கடிதத்தினை துணை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பியிருக்கின்றார். அந்தக் கடிதத்தின்மீதும், மேலான கவனத்தைச் செலுத்தி, அங்கே ஒரு கால்நடை மருந்தகம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிமுறைகளின்படி, 3,000 கால்நடைகள் இருந்தாலே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கமுடியும். 5,000–க்கும் மேலாக அங்கே கால்நடைகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார். எனவே, அந்த அடிப்படையிலே, நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், இப்போது துணைக் கேள்வியில் நீங்கள் கிளை நிலையம் வேண்டுமெனக் கேட்டீர்கள். ஆனால், மூலக் கேள்வி கட்டடம் சம்பந்தப்பட்டது என்றாலும்கூட, இதைக் கேட்பதற்கு நான் அனுமதித்தேன். எனவே, தொடர்புடையதாக இருந்தால் பரவாயில்லை. திடீரென ஒரு சப்ஜெக்ட்டிலிருந்து, வேறு சப்ஜெக்ட்டிற்குப் போகாதீர்கள்.

அடுத்து, வினா வரிசை எண் 174, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

174—

மாணவர் விடுதி

***503—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2012 ஏப்ரல் 26]

திருமயம் தொகுதி, கழனிவாசல் மேல்நிலைப் பள்ளியில், ஆதி திராவிடர் மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் கழனிவாசல் அரசு மேல்நிலைப் பள்ளியில், ஆதி திராவிடர் நல மாணவர்களுக்குப் புதிய விடுதி தொடங்கிட தேவையான இடம், கட்டமைப்பு வசதிகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் நிதிநிலைமைக்கு ஏற்ப, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து அவர்கள்.

திரு. பி.கே. வைரமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அள்ளிக் கொடுக்கும் அட்சய பாத்திரமாய், அமுதசுரபியாய்த் திகழும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், திருமயம் சட்டமன்றத் தொகுதி, கழனிவாசல் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 81 ஆதி திராவிட மாணவ–மாணவியர் படிக்கின்றார்கள். அவர்களின் நீண்டநாள் கோரிக்கையான ஆதி திராவிடர் மாணவர் விடுதி கட்ட அரசு பரிசீலிக்கும் என்று அறிவித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்த ஆண்டிலாவது அந்த ஆதி திராவிடர் மாணவர் விடுதியைக் கட்டித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுடைய நலன் கருதி நமது அரசு

எண்ணற்ற மாணவர் விடுதிகளைப் புதிதாகக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவது பாராட்டக்கூடியது. அதேசமயத்தில், கட்டப்பட்டிருக்கக்கூடிய மாணவர் விடுதிகள் பராமரிக்கப்படாத காரணத்தினாலே, அவை பார்ப்பதற்குக்கூட முடியாத அளவிற்கு மிகவும் மோசமாக இருக்கின்றன. எனவே, இந்த மாணவர் விடுதிகளைப் பராமரிப்பதற்கென்று ஆண்டுதோறும் ஏதாவது நிதி ஒதுக்கப்படுகிறதா? அப்படி, நிதி ஒதுக்கப்படின், அந்தப் பராமரிப்புப் பணி எந்தத் துறையின்கீழ் செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசு, 5 ஆண்டுகளாக மாணவர் விடுதிகளைப் பராமரிக்க எந்த நடவடிக்கையும் எடுக்காமல் விட்டுவிட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் 73.6 கோடி ரூபாய் மதிப்பீட்டில், (மேசையைத் தட்டும் ஒலி) 1,059 மாணவர் விடுதிகளைப் பராமரிக்க ஆணையிட்டுள்ளார்கள். அந்தப் பராமரிப்புப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், எந்த விடுதி பராமரிக்கப்படாமல் இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், அந்த விடுதி நிச்சயமாக இந்த ஆண்டில் எடுத்து பராமரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 175, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

175—

குளிர்சாதனக் கிடங்கு

***4935—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கடற்கரை மீனவ கிராமங்களில் மீன்களைப் பாதுகாக்க குளிர்சாதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?